## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 927/2017, 928/2017,930/17,932/17,மற்றும் 933/17** **நாள். 02.03.2023**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 02 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசுந்தரி | தொழில் | |
| த. பெ./க.பெ. | கொண்டாரெட்டி | சாதி | |
| கிராமம் | ஆர் .நயம்பாடி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | |

**ம..சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-1ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 1** **ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.1- 17.12.2012 தேதியிட்ட சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்.
2 ம.த.சா.ஆ 2 - 17.12.2017 செஞ்சி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு சான்றிட்ட நகல்.
3. ம.த.சா.ஆ.3 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு ஆவணம் சான்றிட்ட நகல்.
4. ம.த.சா.ஆ.4 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பர்மிட் சான்றிட்ட நகல்.
5. ம.த.சா.ஆ.5 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பிட்டு ஆவணம் ஜெராக்ஸ் நகல்.
6. ம.த.சா.ஆ.6 - விபத்துஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல்.
7. ம.த.சா.ஆ.7 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல்.

8. ம.த.சா.ஆ.8 - விபத்து நடந்த இடத்தின் மாதிரி வரைபடம்.

9. ம.த.சா.ஆ.9 - விபத்து நடந்த இடத்தின் பார்வை மகஜர் சான்றிட்ட நகல்.

10. ம.த.சா.ஆ.10 - விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை சான்றிட்ட நகல்.

11. ம.த.சா.ஆ.11 - மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

12. ம.த.சா.ஆ.12 - மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**எதிர்மனுதாரார் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**